ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ பகுதி ய.
Vol. 8. October & November 1931. No. 10.

பழவினை.

நித்தியப் பொருளாகிய ஆத்மாவினால் பண்டைக்காலந் தொட்டுச் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளைப் பழவினை யென்று வழங்குவர். வினையானது மூன்றுக்ஷணம்வரையிருந்து நான்காவது க்ஷணத்தில் அழியுமியல்பினையுடையது. இவ்வாறிருக்க, இவ்வினை செய்தவன் எவ்வளவோ காலங்கழித்து மரணமானபிறகு ஸ்வர்க்க நரகங்களில் அதன் பலனை யநுபவிக்கின்றானென்பது எவ்வாறு பொருந்துமென்று ஐயமுண்டாகலாம். இதற்கு இருதிறத்தினர் இரண்டுவகையாகச் சமாதானங் கூறுகின்றனர். அவர்களில் பூர்வ மீமாம்ஸகராகிய ஒருசாரார், ஆத்மாக்கள் செய்த வினை அழியு மியல்பினையுடையதாயிருந்தாலும் அதினின்றும் அபூர்வம் என்ற தர்மம் பிறக்கும். அஃதழியாதிருந்து பலத்தைத் தருமென்கின்றனர். மற்றொரு சார்பினராகிய * வேதாந்திகள், ஆத்மாக்கள் செய்த நல்வினை தீவினைகளை எல்லாமறிந்தவனாகிய இறைவனறிந்து அவ்வாத்மாக்கட்குப் பலத்தைக் கொடுக்கின்றான் என்கின்றனர்.

கர்மம் அதிருஷ்டத்தின் வழியாய் நின்று பலத்தைத்தருகின்ற தென்பதால் கர்மத்திற்கே சிறப்பைக் கூறியவராகின்றார் மீமாம்

* வேதாந்திகள்—பராசர், வியாசர் முதலானவர்கள்.

ஸகர். அசேதனமாகிய கருமம் பலத்தைத் தருகிறதென்பது பொருந்தாது; பரமசேதனனாகிய இறைவனே பலத்தைத்தரும் சக்தியுடையவனாவானென்று இறைவனுக்கே சிறப்பைக் கூறியவரா கின்றார் வேதாந்திகள்.

இவ்விருசார்பினர்களின் கொள்கைகளே பல சாஸ்திரங்களி லும் நிறைந்துள்ளனவென்பதை ஆய்ந்துணர்ந்துள்ள அறிஞர் நன்கறிவர். சமணர்களும்,

> "பல்லாவுள்உய்த்துவிடினுங்குழக்கன்று
> வல்லதாந்தாய்நாடிக்கோடலை—தொல்லைப்
> பழவினையுமன்னதகைத்தேதற்செய்த
> கிழவனைநாடிக்கொளற்கு"

என்று இருவினைப்பயன் செய்தவனையே சென்றடையுமென்பதை உவமை முகத்தான் நன்கு விளக்கிக்காட்டினர். இவர்களும் மீமாம் ஸகரின் கொள்கையைப் பின்பற்றியவராவர்.

"ஊழ்" என்ற அதிகாரத்தில் திருவள்ளுவரும், "பேதைப் படுக்குமிழவூழ் அறிவகற்றும், ஆகலூழுற்றக்கடை" என்றும், "நல்லவையெல்லாஅந் தீயவாமதீயவும், நல்லவாஞ்செல்வஞ்செயற்கு" என்றும், "ஊழிற்பெருவலியாவுள" என்றும் ஊழிற்கே கர்த்ருத்வ முரைக்கும் மீமாம்ஸகரின் ஸித்தாந்தத்தை மேற்கொண்டுரைத் தனர். இவ்வதிகாரத்திற்குப் பொருள்கூறவந்த பரிமேலழகரும், "ஊழாவது - இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி" என்றுரைத்தனர். இதுநிற்க,

> "வகுத்தான் வகுத்தவகையல்லாற்கோடி
> தொகுத்தார்க்குந்துய்த்தலரிது"

என்ற திருக்குறளிற்கு இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் இரண்டு பொருள் பொருந்துமாறே உரைத்திருக்கின்றனர். இவ் விருபொருள்களுள் ஒன்று மீமாம்ஸகரின் கருத்திற்கியைந்ததாயும், மற்றொன்று வேதாந்திகளின் கொள்கைக்குப் பொருந்தியதாயு மிருக்கும். பரிமேலழகர் உரைத்த பொருளோ மீமாம்ஸகரின் கொள்கையைப்பற்றியதே. அது வருமாறு:—

"கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும், வகுத்தான் வகுத்தவகையல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்தவகையா னல்லது நுகர்தலுண்டாகமாட்டாது;" எ-ம்.

ஓருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், 'வகுத்தான்' என்றார். "இசைத்தலுமுரிய வேறிடத்தான" என்பதனான் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்குமென்றமையான், உம்மை எச்சவும்மை. வேறு முயற்சிகளாற் பொருள்களைப்படைத்தலல்லது நுகர்தலாகாது. அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று" என்பதாம்.

இனி மற்றோர் பொருளை ஆராய்ந்தால் வேதாந்திகளின் கொள்கையைப் பெரிதுமுடன்பட்டுள்ளாரென்பதும் புலனாகும். அது வருமாறு:—

வகுத்தான் - இன்னவினை செய்தார்க்கு இன்னபலனுளதாம் என்று வகுத்தவனாகிய இறைவனால், வகுத்தவகையல்லால் - வகுக்கப்பட்ட வகையாலல்லது, கோடிதொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளால் அநுபவிக்கப்படும் பொருள்கள் கணக்கற்றனவற்றை முயன்று தொகுத்தவர்க்கும், துய்த்தல் அரிது - அநுபவித்தலுண்டாகமாட்டாது. எ-ம்.

ஆத்மாக்களோ எண்ணிறந்தன. அவைகள் செய்த கர்மங்களும் அத்துணையன. இவைகளை சன்காராய்ந்து முற்பிறப்பில் ஓராத்மா செய்த வினையின் பயனை மற்றோராத்மா அநுபவிக்காமல் அதனை வகைசெய்தற்கு எல்லாமறியும் வல்லமை வேண்டும். இப்பொருளை சண்டு 'வகுத்தான்' என்பதனாற் பெறவைத்தார். வகுத்த வகையானது இறைவனுடைய சங்கற்பரூபஞானவடிவாயிருக்கும். ஆத்மாக்கள் செய்த வினையின் பயனை அநுபவித்தற்கு இறைவன் வகுத்தவகை காரணமாமேயன்றிப் பிறிதொன்றுங் காரணமாகாதென்பார் 'வகுத்தவகையல்லால்' என்றார். கோடிதொகுத்தல் என்பது அநுபவித்தற்குச் சாதனங்கூறியவாறு. [கோடிதொகுத்தல் - எண்ணிறந்த பொருளையீட்டுதல்.] உலகத்தில், "பொரு

ளிலார்க்கிவ்வுலகமில்லை" என்று இன்பத்தை யநுபவித்தற்குப் பொருள் சாதனமாகுமென்பர். அதுவும் இறைவனது சங்கல்பத்தோடு சாராதபோது பயனற்றதாயொழியு மென்பார் 'துய்த்த லரிது' என்றார். இங்குப் பிறர் தம் மதத்தை அநுவதித்துக் களைந்தார். அவரவர் செய்த வினையை யறிந்து அதற்குத் தக்கவாறு பயனூட்டவல்லது இறைவனுடைய சங்கற்பரூபஞானமே யாம். பொருளையீட்டினரின் சாமர்த்தியமும், பொருளும் சாதனமாக மாட்டா. இதனால் திருவள்ளுவர் வேதாந்திகளின் கொள்கையையுமேற்கொண்டுள்ளாரென்பது தெளிவாயிற்று.

சேதனன் செய்த கர்மமே அதிருஷ்டத்தின் வழியாக நின்று பலத்தைத்தருகிறதென்கிற மீமாம்ஸகரின் கருத்தை ஆராய்ந்தால், சேதனன் பேற்றுக்குத்தானே முயலுதற்குரியவனென்பதும், அதனால் அவனுக்குப் பேறு ஸித்திக்குமென்பதும் விளங்கும். இதுபற்றியே கண்ணபிரான் அர்ச்சுனனை நோக்கிப் பல அத்தியாயங்களில் கர்மஞானபக்திகளை விதித்தான். ஸத்கர்மாநுஷ்டானத்தால் அந்தக்கரணசுத்தியும், அதனால் ஞானமும், அதனால் பக்தியும், அதனால் மோக்ஷஸித்தியுமுண்டாமென்பது அவற்றின் முறைகளாம். வேதபுருஷனும் இவ்வாறே விதித்துள்ளான். ஸூத்ரகாரரும், "ஶாஸ்த்ரம் ப்ரயோஜகம்" "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி" என்றுஞ் சொல்லப்பட்டுளது.

இவையெல்லாம் சேதனனே செய்துமுடிக்கத்தக்கவனென்று அவன்மீதேறிட்டுச் சொல்லப்பட்டனவாதலால் இவற்றைப் பிரவிருத்திமார்க்கங்களென்று வழங்குவர். அநாதிகர்மவாஸனையினால் தீயவொழுக்கத்தில் திரிகின்றவர்களை மீட்டுவிப்பதற்காக இந்தப் பிரவிருத்திமார்க்கம் விதிக்கப்பட்டது. இக்கருத்தினை லோகதேசிகனும், "வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதித்தது, கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக"

என்று அருளிச்செய்தார். உலகத்தில் தீயவொழுக்கத்தில் மண்டித் திரிவார் அநேகராதலால் அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக எழுந்த ப்ரவிருத்திமார்க்கப் ப்ரமாணங்களும் மிகுதியாகக் காணப்படும். இந்தப் ப்ரவிருத்திமார்க்கமனைத்தும் பூர்வபக்ஷமாமென்பது கண்ணபிரான் அருளிய சரமச்லோகத்தால் நன்கு புலனாகும்.

முன்பு கர்மஜ்ஞானபக்திகளை உபதேசித்ததைக்கேட்ட அர்ச்சுனன், 'இனி நாம் கர்மஜ்ஞானபக்திகளை விதிப்படி அநுஷ்டிப்பது அருமையாகும். இஃதல்லாமலும் ஈச்வர பரதந்த்ரனான ஆத்மாவுக்கு ஸ்வதந்திரமான முயற்சியும் விரோதமாம்; இனி யென்செய்வது' என்று சோகமுடையவனாயினன். அப்பொழுது கண்ணபிரான் அர்ச்சுனனை நோக்கி, இனி நீ எல்லாத் தர்மங்களையும்விட்டு என்னையே உபாயமாகப்பற்றுவாய்; நான உன்னிடத்திலுள்ள பாபமனைத்தையும் விடுவிக்கின்றேன்; என்றருளிச்செய்தான். இவ்வாறருளிச்செய்ததை நிவிருத்திமார்க்க மென்பர். இங்குக் கண்ணபிரான் சேதனனுக்குப் பேற்றைத்தருவதைத் தன்னுடைய தொழிலாக அருளிச்செய்தான். இது, வேதாந்திகளின் ஸித்தாந்தமாம்.

அதிருஷ்டம் என்பது மீமாம்ஸகர் கருத்தின்படி தனியே ஒரு தர்மமில்லை. அது, ஸர்வேச்வரனுடைய இஷ்டாநிஷ்ட வடிவமாயிருக்கும். இதனை, "யத் த்வத் ப்ரியம் ததிஹ புண்யம் அபுண்யம் அந்யத்" என்று கூரத்தாழ்வான் அருளியதினுமறியலாம். இன்னும் இதனை மற்றோர் விருத்தாந்தத்தாலும் தெளியலாம். அது வருமாறு :—

"ஒருநாள், பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாய்ப் பெருங்கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து பகவத் கல்யாண குணாநுஸந்தானம் நடவாநிற்க, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் 'நாம் பண்ணின ஸுக்ருதமன்றோ இப்படியிருக்கப்பெற்றது!' என்ன, அவ்வளவிலே சிறியாச்சான் எழுந்திருந்து நின்று 'நெடுங்காலம் பெருமாள் ரக்ஷகரென்று சிக்ஷித்துவைத்து, இப்போதாக ஒரு ஸுக்ருததேவருண்டாவதே!' என்று அருளினார்; இத்தால்,

உஜ்ஜிஜீவயிஷுவான ஈசுவரனிருக்க, ஆநுகூல்யங்களுக்கு ஸாத்ருதம் அடியென்கை ஸ்வரூபநாசம் என்றபடி''.

மேலும், மீமாம்ஸகரின் கொள்கையையும், வேதாந்திகளின் கருத்தையும் விளக்க ஒரு இதிஹாஸ முறைக்கப்பெறும் :—

ஸ்ரீ விபீஷணாழ்வான் தன் தமயனாகிய இராவணனை நல்வழிப் படுத்துவதற்காக வேண்டிய ஹிதோபதேசஞ்செய்தும் பயனடையாதொழிந்தது. உடனே விபீஷணாழ்வான் லங்கையிலுள்ள ஆசையையும், தாரபுத்திரர் முதலானாரிடத்திலுள்ள விருப்பத்தையும் அடியோடொழித்து, அனலன் அனிலன் அரன் சம்பாதி என்ற நான்கு மந்திரிமார்களுடன் புறப்பட்டு ஆகாயத்தில் நின்று * ''நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம், ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே'' ''நிவேதயதமாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம், ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே''என்று கூறினர். அப்பொழுது சுக்கிரீவன் முதலான வானரவீரர்கள் தோஷமுடையவர்கள் ராமகோஷ்டியிற் புகுதற்குரியவராகார்; என்று சரணம்புகவந்த விபீஷணாழ்வானைத் தடுத்தார்கள். இங்குத் தோஷமே காரணமாகச்சொல்லி, சுக்கிரீவாதிகள் தடுத்தனராதலால் இவர்கள் அப்பொழுது கருமத்திற்கே வலிமை கூறுகின்ற மீமாம்ஸகரின் கொள்கையை மேற்கொண்டவராயிருந்தனர்.

இவ்வாறு சரணம்புகவந்த விபீஷணாழ்வானைத் தடுத்த சுக்கிரீவாதிகளை நோக்கி, நீங்கள் கருதியபடி இவன் தோஷமுடையவனாகிலுமாகுக; † ''மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந,

---

* (இதன் பொருள்) எல்லா லோகங்களிலுமிருக்கிறவர்கட்கு ரக்ஷகரான மிகுந்த ஸ்வபாவத்தையுடைய ரகு குலத்தில் அவதரித்த ஸ்ரீராமன் பொருட்டு வந்திருக்கிற விபீஷணனென்று பெயரையுடைய என்னை விரைவாக அறிவிப்பீர்களாக; என்பதாம்.

† (இதன் பொருள்) நட்பினன்போலப் பாவித்துக் கிட்டியவனை யான் ஒருபடியாலும் கைவிடமாட்டேன். தோஷமிருந்தாலும் அவனுக்குக் காரியஸாதகமாகும். இவனை அங்கீகரிப்பது ஸாதுக்களுக்கு நிந்தியமாகமாட்டாது; என்பதாம்.

தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாமேதத கர்ஹிதம். ""மித்ரபர் வேந ஸம்ப்ராப்தம் நத்யஜெயம் கதஞ்சந, தோஷோயத்யபி தஸ்யஸ் யாத் ஸதாமேததகர்ஹிதம்" என்று அருளிச்செய்து விபீஷணும் வானை அங்கீகரித்தனர்.

மீமாம்ஸகரின் கொள்கை உண்மையாயிருக்குமாகில் ராம பிரான் சுக்கிரீவாதிகளுடன சேர்ந்துகொண்டு அவர்கள் கருதிய படி தோஷமுடைய விபீஷணும்வானை அங்கீகரிதிருக்கலாகாது. இங்கு ராமபிரான் தோஷத்தையும் அநுக்ரஹத்திற்கு விஷயமாக்கு கிறேனென்றதனல் இச்சாவடிவாகிய அவனது ஞானமே காரிய ஸித்தியைத் தருமென்பதும், அசேதனமாகிய கருமம் தானே பலத்தைத்தரமாட்டாதென்பதும் நன்கு விளங்கும்.

இதுவரையுங் கூறியதினுல் பழவினையென்பது அதிருஷ்டத் தின் வழியாய் நின்று தானே பலத்தைத் தருமென்று கர்மத் திற்குக் கர்த்ருத்வத்தைக் கல்பிக்கின்ற மீமாம்ஸகரின் கொள்கை யைக் காட்டிலும் எல்லாமறிந்த ஸர்வேசுவரனுக்கே கர்த்ருத் வத்தைச் சொல்லுகிற வேதாந்திகளின் கொள்கை சாலச்சிறந் தாமென்பது புலனுகும்.

ப. அ.

ஸ்ரீ:

எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(173-ம் பக்கத்தொடர்ச்சி).

ஸர்வேசுவரன் உலகத்தினரை நல்வழிப்படுத்தத் திருவுள்ளம் பற்றி ஸம்ஸாரிகளைக் கடாக்ஷித்து அவர்களைக்கொண்டு திவ்யப் பிரபந்தத்தை வெளியிடச்செய்தான். அந்தத் திவ்யப் பிரபந்தத்தின் கருத்தை ஆராய்ந்துரைக்க நித்தியஸூரிகளை ஆசார்யர்களாக அவதரிக்கச்செய்தான். இவ்வாறின்றி நித்தியஸூரிகளைக்கொண்டு இரண்டு காரியங்களையும் நடத்திப்போகலாம். அப்படியானால் மூலநூலாகிய திவ்யப் பிரபந்தங்கட்கு நித்யஸூரிகள் அவதரித்து வெளியிட்டார்கள் என்ற ஏற்றமுண்டாகும். எம்பெருமானுடைய பெருமையைக் கூடவிருந்து அநுபவித்தவர்களின் வாயினால் கேட்கப்படுவதால் தெளிவாக விளங்கக்கூடியதாகையால் விசேஷமான விசுவாசத்திற்குடலாகும்.

இவ்வாறின்றி இரண்டையும் ஸம்ஸாரிகளைக் கடாக்ஷித்து அவர்களைக்கொண்டு நடத்திப்போகலாம். அவ்வாறு செய்யாமல் மூலப்ரபந்தங்கட்கு ஸம்ஸாரிகளைக் கடாக்ஷித்ததுக்கும் அதன் கருத்தை யெடுத்துரைக்க நித்தியஸூரிகளை அவதரிக்கச் செய்ததற்கும் காரணம் யாதெனின்? எம்பெருமான் உலகத்தைத் திருத்தப் பண்முறை அவதரித்தும் பயனற்றதுகண்டு ஒத்த இனத்தினரைக்கொண்டு திருத்துவதாக நினைப்பிட்டான் ஸம்ஸாரகந்தமெட்டாத நித்தியஸூரிகள் தன்னோடு பரமஸாம்யத்தை அநாதியாகப்பெற்றவர்களாகையாலே அவர்கள் அவதாரமும் தன்னுடைய அவதாரத்தோடு ஒக்குமத்தனையல்லது அதற்கு ஒரு விசேஷமிராது.

மேலும், எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தை உபதேசிப்பதிலுங்காட்டில், விடத்தக்க ஸம்ஸாரத்தினுடைய தோஷஜ்ஞானத்தை முதன் முதல் உண்டாக்கவேண்டிய தவசியமாகும். விட்டபிறகன்றோ பற்றவடுப்பது. இதுபற்றியே ஆழ்வார் ஸம்ஸாரிகட்கு உபதேசிக்கத்தொடங்கும்போது "வீடுமின்முற்றவும்" என்று முன்னர் விடவேண்டிய அம்சத்தை!உபதேசித்தார். ஆக, தாம்பற்றியது பசையற்றதெனத் தெளிந்து அதில் நசையற்று விடுகைக்கும், அதினுடைய க்ரௌர்யம் நெஞ்சிற்பட்டு நடுங்கிப் பதறி உதறுவதற்கும் அடியான ஓர் அருவருப்பும் அச்சமும் உண்மையாக உண்டாக வேண்டுவதற்கும அதன் தோஷத்தை உள்ளபடி அநுபவித்தவன் சொல்ல நேருமானால், அது அநுபவம் வாய்ந்தவன். சொல்லாகையாலே கேட்பாருக்கு நடுக்கந்தலையெடுத்து நசையற்றுப் பகவத விஷயத்தில செவிசாய்க்க இசைவு பிறக்கும். தாம் இதுவரை மயக்கந்தோற்றி அலைந்தமை நெஞ்சிற் புலப்படும்.

இவ்வாறின்றி அதன் அநுபவம் இல்லாதான் ஒருவன் இவர்கள் அநுபவித்துவருவதற்குத் தோஷங்காட்டி உபதேசிப்பானாகில், அது பயனற்றதாய் முடியும். இஃதல்லாமலும் உபதேசித்த இவனுக்கு அநுபவமில்லாமையால் ரஸமறிந்தவனாக மாட்டான். ஆகையால் தானுமிழந்தான். ரஸிகராய் அநுபவிக்கும் நம்மையும் ஏமாற்றி நாசமாக்க வந்தான். "𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌯𑌿𑌤𑍁𑌂 𑌉𑌪𑌕𑍍𑌰𑌮𑌤𑍇" "ஸ்வயம் நஷ்ட: பாரந்நாசயிதும் உபக்ரமதே" இவன்படி என்று அவர்கள் இவனைப் பரிகஸிக்கத் தேடுவார்கள். ஆக ஸம்ஸாரகந்தம தட்டாத ஸூரிகள் அநாதரத்துக்கே ஏதுவாகும்.

ப்ரத்யக்ஷாநுபவமிருந்தும் பயனற்றதாம்படி செய்யவல்ல மாயமான இந்த ஸம்ஸாரம் அநுபவமில்லாதான் ஒருவன் சொல்வதனால் தனது தோஷம் நெஞ்சிற்பட்டுத் தன்னை இகழ்ந்து கழிப்பதை ஸகிக்குமோ? யாரும் வியக்கலாயபடியன்றோ இதன் மயக்கத்தின் பெருமை.

இனி, சிலநாள் அநுபவித்துக் கழித்த நிலைமையுடைய முக்தரைக்கொண்டு வெளியிட்டாலும் தோஷந்தட்டும். அவர்கள் நெடுநாள் அநுபவித்திருந்தார்களேயாகிலும் இப்போது "நோபஜநம்ஸ்மரந்" என்று அதை அடியோடு மறந்தவர்கள். மேலும், அநுபோகதசையில் தோஷந்தட்டில் பதறித்துடித்து அலறிப் பேசும் வார்த்தைக்கு பெருமை பேலிட்டிருக்கும. முக்தர்கட்கு இப்போது ஸம்ஸாரபயம் இல்லாமையாலே அப்படிப்பட்ட பதற்றம் உண்டாக மாட்டாது. ஆகையால் ஆழ்வார்கள் ஸம்ஸாரிகளாயிருந்தே விசேஷகடாக்ஷம் காரணமாகத் திவ்யப்ரபந்தங்களை வெளியிட்டருளினாகளென்பதே சாலப்பொருத்த முடையதாகும்.

இனி, இதுபோல ஸம்ஸாரிகளையே ஆசார்ய பதவியை நிர்வஹிக்கச்செய்வது பொருந்தாது. அப்படியானால மயர்வற மதிநலமருளப்பெற்று அநுபவபரீவாகமாய வழிந்துவந்த சொல்லாக அமையப்பெற்ற திவ்யப்ரபந்தங்களிலுள்ள அநுபவப் பிரகாரங்களை உள்ளபடி ஆராய்ந்துரைப்பதற்கு ஆழ்வார்கட்குண்டான ஞான வைராக்யமும, அநுபவச் சிறப்பும், இவர்கட்கு முண்டாகில் ஆழ்வார்களுடைய அநுபவம் தங்கட்கும் ரஸித்துத் தாங்களும் அநுபவித்து பிறருக்கு உபதேசிக்கவும் பொருத்தமாகும். அப்படியாம்போது ஈசுவரன் ஆழ்வார்களைப் போலே இவர்கட்கும் காரணத்தை நோக்காமல் மயர்வறமதிநலத்தை அருளவேண்டும்.

இப்படி விஷயீகரிக்கப் பெற்றிருக்கும்போது இவர்கள் ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தின் கொடுமையை உள்ளபடி உணரப்பெற்றவர்களாய் ஆழ்வார்கள் பதறியதுபோல இவர்களும் மிகவும் பதறி அவனைத் தடுத்தும் வளைத்தும் திருவாணையிட்டும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் குறைக்கச்செய்து அவனைப்பெறத் தேடுவார்கள். இருள் தருமாஞாலமான இந்நிலத்தில் தரித்து நின்று இங்குள்ளவர்களைத் திருத்திப் பணிகொள்ள இசையார்கள்.

இது காரியத்தை நினைத்து ஈசுவர விஷயீகாரம் பெற்றுத் திருந்திய ஆழ்வார் அநந்தரம் அவனடிவணங்கி, முன்னர்

"பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி, "இனியாமுறாமை" செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்து, பின்னர் இனியினி என்று இருபது முறை ஆர்த்திதலையெடுத்து கேட்டார் நெஞ்சு நீருகி அழிய, அவனுக்கும் தெளிவிசும்பிலிருப்பு அரிதாம்படி கண்ணீர் மல்க நின்று "விண்ணுளார் பெருமானேயோ" என்று ஆகாயத்தை நோக்கிப் பெறுமிடறு செய்து அழுதும் தொழுதும் ஆடியும் பாடியும் தடுமாற்றமுற்று நின்றனர். இந்நிலைகண்ட எம்பெருமான் ஆழ்வாரைநோக்கி, உம்மை நாட்டாரைத் திருத்துவதற்காக வைத்தோம்; பதறுதீர்; உமக்கு ப்ராப்தி தப்பாது என்று தன் கருத்தை நன்கு தெரிவித்தான். அதன்மேலும் அவர், "ஏபாவப்பரமே" என்று வெறுத்து, "உன் பாதம் நண்ணிலா வகையே நலிவானின்னமெண்ணுகின்றாய்" என்று பழிதூற்றித் தடுத்துத் திருவாணையிடும்படி துடித்து நின்றவரை ஒருவாறு நிலை நிறுத்திப் பிரபந்தந் தலைக்கட்டவேண்டித் தான்பட்ட தடங்கலும் ஸர்வஜ்ஞனான தான் மறக்காமல் நெஞ்சில் வைத்திருப்பன். ஆகையால் அது விஷயத்திற்கு ஸம்ஸாரிகளைக் கடாக்ஷித்துவிட நினைத்தானில்லை.

இனி, நித்யஸூரிகளை அவதரிக்கச் செய்தானாகில் அவர்கள் தாம் அடியறியுமவர்களாகையாலே ஸம்ஸாரபயம் தமக்கில்லாமையாலே தாம் தொடங்கிய காரியம் தலைக்கட்டுமளவும் பொறுத்து நின்று திருத்தப்பார்ப்பார்கள். ஆகையால் நித்தியஸூரிகள் ஆசார்யர்களாக அவதரிப்பதுதான் சாலப்பொருத்தமுடையதாம். ஆசார்யர்கள் நித்தியஸூரிகளாகும்போது ஜ்ஞான வைராக்யமும் அநுபோகச் சிறப்புங் குறைவுபடாமையாலே உபதேசமும் தெளிவாகும். ஸம்ஸாரபயமில்லாமையாலே பதற்றமும் வராது.]

இவ்வாறு அவதார விசேஷமாயுள்ள ஆசார்ய பரம்பரைக்கு நடுநாயகமாய் விளங்குகின்றவர் எம்பெருமானாராவர். ஒருஹாரத்தின் நடுவே பதியப்பெற்ற நாயகரத்தினம் இருபுறத்திற்கும் ஓரழகைப் பிறப்பிப்பதுபோல, இவரும் முன்னும் பின்னுமுள்ள ஆசார்ய பரம்பரைக்கு ஒரு பெருமையை உண்டுபண்ணு நிற்பர்.

இதனை நிகமாந்ததேசிகன், "ஐமாதீமாரா ஹக்ஹாரயஷ்டி: யதிராஜேந நிபத்தநாயகஸ்ரீ:" "மகதிகுரு பக்திஹாரயஷ்டி: யதிராஜேந நிபத்தநாயகஸ்ரீ:" என்ற ஆசார்ய பரம்பரையாகிய ஹாரமானது, எம்பெருமானாராகிய நாயகக்கல்லாலே பெருமை பெற்று விளங்கு மென்றருளிச் செய்தார். அஃதாவது ஹாரம்போலே ஒராண்வழியாய்த் தொடர்ந்து வருகிற குருபரம்பரைக்கு நடுவில் நின்று பெருமையை விளைக்குமவ ரென்பதாம்.

மேலும், ஹாரம் என்று குறிப்பிட்ட முறையால், ஹாரமானது முகப்பிலே தொடங்கப்பெற்று நடுவிலேகொண்டு மறுபடியும் முகப்பிலே முடியப்பெறுவதாயிருக்கும். முகப்பும் நாயகமும் நிற்க, இரண்டு பக்கமுள்ள ரத்தினங்களை முத்துக்களை கணக்கிட ஒற்றுமைப்பட்டும் நிற்கும். இஃதெல்லாமலும் ஒரு மண்டலாகாரமாய் ஹ்ருதயத்திலே தரிக்கக்கூடியதாயு மிருக்கும். இங்கும் பெரியபெருமாளாகிய முகப்பிலே தொடங்கி எம்பெருமானை நாயகமாய் நடுவிலேகொண்டு மணவாளமாமுனிவரை வந்து, பின்பு அஷ்டதிக்கஜங்களாய் அமையப்பெற்ற ஆசார்யர்களாலே இது பலபடியாகப் பெருகிற்றேயாகிலும், பெரியபெருமாள் மணவாளமாமுனிகளிடம் சிஷ்யராய் அமர்ந்து பகவத்விஷயம் கேட்டுவந்த முறையாலே அங்கொருவாறு முடியப்பெற்று, ஒரு மண்டலாகாரமாய்ப் பெரியபெருமாளுக்கும் மற்றையார்கட்கும் ஹ்ருதயத்திலே தார்யமாயிருக்கையாலேஇதை,"குருஹாரயஷ்டி:" என்று குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம்.

இங்கும் இருபுறமும் கணக்கில் ஒற்றுமைப்பட்டிருக்கும். பெரியபெருமாளுக்குப் பின்னர் எம்பெருமானார் வரை நடுவில் பிராட்டி தொடங்கி எட்டு ஆசாரியர்களாவார்கள். அப்படியே எம்பெருமானுக்குப் பின்னர் பெரியபெருமாள் வரை எம்பார் தொடங்கி எட்டு ஆசார்யர்களாவார்கள். ஆனால் வேதாந்ததேசிகன் காலத்தில் மணவாளமாமுனிகள் அவதாரமும் பெரியபெருமாளுடைய சிஷ்யபாவமும் இல்லையேயென்று சங்கையுண்டாகலாம். ஆனால் வேதாந்ததேசிகன் ஸர்வஜ்ஞராகையாலே "பொலிக

பொலிக" போல மேல் நடக்கப்போவதைநோக்கி அருளிச்செய்தா ரென்பது குற்றமாகாது.

மேலும் இம்மஹாநுபாவர் திருவாக்கிலிருந்து அநுபவ பரிவாஹமாய் அவசமாய்வந்த சொல்லாகையாலே * "க்ஷீணாம் ஸுநராத்மாநாம் வாகஜிஹ்வாநுயாவதி" "ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநுதாவதி" என்றபடி இவர் அவசமாய் அருளிச்செய்ததே காரணமாகப் பெரியபெருமாள் மணவாளமாமுனிகளுக்குச் சிஷ்யராயமைந்தாரென்பது மிகவும் பொருத்தமாகும்.

வேதாந்ததேசிகன் ஸ்ரீஸூக்திக்கு மணவாளமாமுனிகளுக்குச் சிஷ்யனாயமைந்தது காலியதற்றுள்ளதாகையாலே அநுவிஷய மாகுமா? ஆகாதா? என்கிற சம்சயமே வேண்டாம். பொதுவாகப் பல ஆசார்யர்களும் குருபரம்பரையை ஹாரமாகவும், எம்பெருமானாரை நாயகமாகவும் அருளிச்செய்து போருகையாலே ஹாரத்துக்குள்ள நிலைமையை நிதானித்து ஔசித்யத்தாலே இப்படிக் கொள்ளத்தட்டில்லை. பெரியபெருமாள் ஒருவருஷம் உத்ஸவத்தை நிறுத்திய பகவத் விஷயத்தை மணவாளமாமுனிகள் வாய்கொண்டு கேட்டுகந்தாரென்பது யாவருமறிந்ததே. அவருடைய சிஷ்யபாவத்தை மணவாளமாமுனிகள் தீர்த்தஸிவஸக் கொண்டாட்டத்தை இன்றளவும் பெரியபெருமாள் அநுஷ்டித்து வருகையாலே காணலாம்.

(தொடரும்).

---

* இதன் பொருளாவது—ஸர்வஜ்ஞராயுள்ள பெரியார் அர்த்தத்தை நிதானித்துச் சப்தத்தைப் பிரயோகிக்காவிடிலும், இவர்கள் வாய் வழியே வந்த சொல்லைப்பற்றி அர்த்தம் தொடர்ந்துசொல்லு மென்பதாம்.

ஸ்ரீ:

நவராத்திரி மஹோத்ஸவம்.

மதுரை, ஸ்ரீ கூடலழகப்பெருமாள் ஸந்நிதி ஸ்ரீ மதுரவல்லித் தாயார் கொலு உத்ஸவம் நாளது பிரஜோத்பத்தி வருஷம் புரட்டாசி மீ 26உ தொடங்கப்பெற்று ஒன்பது நாள்வரை மிகவும் செவ்வனே நடைபெற்றது. கொலு உத்ஸவத்திற்கு அங்கமாக ஷை தாயார் ஸந்நிதி மண்டபத்தில் பதுமை சிங்காரங்களுஞ் செய்யப்பெற்றுள்ளன. அவை காண்பார்கட்கு மிகவும் காட்சியை விளைவித்தன. ஒவ்வொரு உத்ஸவத்திலும் தாயார் திருக்கோலஞ் சாத்திக்கொண்டிருந்த பொழுது யாவருக்கும் குதூகலத்தை யளித்தது. இவ் வுத்ஸவத்தைக் காண்பதற்கு உள்ளூரிலிருந்தும் அயலூரிலிருந்தும் ஆயிரக்கணக்கான பெயர்கள் வந்து இவ்வுத்ஸவத்தைக் கண்டுகளித்தனர். நாளது ஐப்பசி மீ 5உ விஜயதசமி யன்று ஸ்ரீ கூடலழகப்பெருமாளும், மதனகோபாலப்பெருமாளும், வீரராகவப்பெருமாளும் திருவீதிப் புறப்பாடாகி மெய்காட்டுப் பொட்டலில் வன்னியாசுர ஸம்ஹாரமென்ற யாகத்தை நடத்தினர். அக்காலத்திலும் பல சேவார்த்திகள் பெருமாளைச் சேவித்துக் கழிபேருவகை யெய்தினர்.

மதுரை ஜில்லா, நிலக்கோட்டைத் தாலூகா, தனிச்சயம் கிராமத்திலிருக்கும் ஸ்ரீமான் அ. கோவிந்தராமாநுஜ தாஸர் என்பவர் இந்த இரண்டு உத்ஸவங்களையும் தேவஸ்தானத்திற்கு யாதொரு பொறுப்புமின்றித் தம் சொந்தப் பொருளிலிருந்து நடத்திவருகிறார். இவ்வுத்ஸவங்கட்கு வேண்டிய மூல நிதியும் ஏற்படுத்தியுள்ளார், இவர் போன்ற தர்ம சீலர்கள் வேறு சில உத்ஸவங்களையும் இங்ஙனமே நடத்துவதற்கு ஊக்கத்தை விளைவிக்கவேண்டுமென்ற நன் நோக்கத்தோடு ஷை தேவஸ்தானம் ஹானரெரி மானேஜிங் டிரஸ்டி உயர்திருவாளர் T. நாராயண பிள்ளை யவர்கள் உத்ஸவ காலங்களில் தவறாது வந்திருந்து செவ்வையாய் நடத்தி வைத்தனர். மேலும் டிரஸ்டி யவர்கள இந்தத் தேவஸ்தானத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்று பலமுயற்சி செய்து வருகிறார். இவரது உழைப்பும் போற்றத்தக்கதே. இன்னும் பல ஆஸ்திகர்கள் தேவஸ்தானம் பொறுப்பின்றி பல உத்ஸவங்களைச்செய்தால் மிகவும் அநுகூலமாயிருக்கும். அங்ஙனமே செய்யுமாறு வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

(மதுரை, ஸ்ரீவைஷ்ணவ)

ஸத்ஸம்ப்ரதாய ஸபை.

இந்தச் சபை நிகழும் பிரஜோற்பத்தி௵ ஐப்பசி௴ 2௳ யன்று ஸ்தாபிக்கப்பெற்றது. அப்பொழுது கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தெரு இராத்திரி சத்திரம் ஆஞ்சநேயர் ஸந்நிதியில் ஸ்ரீ. உ. வே. T. S. இராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (B.A. B.L.) யவர்களின் அக்ராஸநாதிபத்யத்தில் திருக்கோஷ்டியூர் (குப்பண்ணு வென்ற) ஸ்ரீ. உ. வே இராமாநுஜாசார்யஸ்வாமி 'சரணாகதி' என்ற விஷயத்தைக்குறித்து உபந்யஸித்தனர். அதன்மேல் அக்ராஸநர் முடிவுரை கூறினர். பின்னர் ஸபாபிமானிகளில் ஒருவர் ஸபையின் நோக்கங்களைத் தெரிவித்தனர். அவை: ஸ்ரீ விசிஷ்டாத்வைத தத்வங்களைப் பெரியார் வாயிலாக யாவர்க்குந் தெரிவிக்கவேண்டு மென்பதும், மாணவர்கட்கு நல்லொழுக்கமுறைகளைக் கற்பிக்க ஓர் கலாசாலை தொடங்கவேண்டுமென்பதும், இன்னும் இன்றி யமையாத ஸ்ரீ வைஷ்ணவ தர்மங்களைப் பாதுகாக்கவேண்டுமென் பதுமாம்.

இச்சபையின் கொள்கைக்கு ஏற்றபடி நாளது ஐப்பசி௴ 16௳ யன்று வடக்குமாசிவீதி யாதவகண்ணன் ஸந்நிதியில் மாணவ பாடசாலை ஏற்படுத்தி, அதில சில மாணவர்கட்குச் சந்தியாவந்தனக் கிரமம், திருவாராதனமுறை, ஸ்தோத்திரப் பாட முதலியவற்றைக் கற்பித்து வருகிறார்கள். இந்தச் சிறந்த பட்டினத்தில இதுவரை இத்தகைய காரியம் நடைபெறாதிருந்தது பெருங்குறையே யாகும். இக்குறை நீங்க ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் எடுத்துக்கொண்ட பேருழைப்புப் போற்றத்தக்கதே. மேன்மேலும் இச்சபை விர்த்தி யடையுமாறு எம்பெருமான் இன்னருள் புரிவானாக.

ஸ்ரீ:

மதிப்புரை.

கல்விக்கடல்: இஃதோர் சிறந்த மாதத் தமிழ்ப்பத்திரிகை. பிரஹ்மஸ்ரீ M. வெங்கடராம சாஸ்திரி (M.A; L.T;) யவர்கள் இதன் ஆசிரியராவார். இவர் பல்லாண்டுகளாக மதுரை கல்லூரியில் சொற்பொழிவாளராகவும், சேதுபதி உயர்தரக்கலாசாலைத் தலைமையாசிரியராகவுமிருந்தவர். இவரை யறியாதார் ஒரு சிலரே யாவர். இப்பத்திரிகையின் முகவுரையிற் குறிப்பிட்டபடி, பூதபௌதிகப் பகுதி, இரசாயனப்பகுதி, கூட்டுறவுப்பகுதி, பண்டைக்காலத் திலக்கிய இலக்கண ஆராய்ச்சிப்பகுதி, ஆசிரியர் பகுதி, மாணவர் பகுதி, சுவைப்பகுதி, தற்கால நிகழ்ச்சிப்பகுதி முதலிய பலதிறப் பொருள்களுடன் இது மிளிர்கிறது. இங்ஙனம் சிறந்த பல நூற பகுதிகளைத் தனக்கங்கமாகக்கொண்டு விளங்குகின்ற இதனை நோக்குறின், தமிழுலகிற்குற்ற பெருங்குறையகற்றவே இது தோன்றியதென்பது தெற்றெனப்போதரும். உறுதிப்பொருள் பயவா வீண் நகைச்சுவையினைக்கொண்ட கட்டுரைகளையுடைய பல பத்திரிகைகள் உலாவுகின்ற இககாலததில இதுபோன்ற பத்திரிகை அரிதென்றே இயம்பலாம். கடல் அரதன முதலிய அரிய பொருள்கட்கு ஆதாரமாயிருப்பதுபோல இக்கல்விக்கடலும் அரிய பல கலைப்பொருள்கட்கு ஆதாரமாகவே விளங்குகிறது. ஆங்கிலம் வல்ல பிரபல பண்டிதர்களாலும், சிறந்த தமிழ்ப்பண்டிதர்களாலு மெழுதப்பெற்ற கட்டுரைகளைக்கொண்டுள்ளத்தினால் வாங்கிப் பயில்வோர்க்கு இது, இன்சுவையையும், நற்பயனையும் பயக்கும். பல சொல்வியென்? இக்காலத்தில் யாவரும் ஆதரிப்பதற்கேற்றவாறே இஃதமைந்துள்ளது. அதனால் அனைவரும் இதனை ஆதரித்து இவ்வாசிரியருக்கு ஊக்கத்தை விளைவிப்பார்களாக. வேண்டுவோர் கீழ்க்குறிப்பிடப்பெற்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

மானேஜர்,
கல்விக்கடல் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.